# வாக்கு எண்ணிக்கையை சீர்குலைக்க பா.ஜ.க. சதி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார்!

**சென்னை, மே 4 -**

**தமிழ்நாட்டில் நடைபெறும் வாக்கு எண்ணிக்கையை சீர்குலைத்து, சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்த பா.ஜ.க திட்டமிட்டுள்ளதாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் டி.ஜி.பி.யிடம் தி.மு.க அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார் அளித்துள்ளார்.**



இது குறித்து தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரிக்கு ஆர்.எஸ்.பாரதி எழுதி உள்ள கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளில், வாக்கு எண்ணும் மையங்களில் குழப்பங்களை விளைவிக்க, பா.ஜ.கவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் திட்டமிட்டுள்ளதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இத்தகைய செயல்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு உள்ளேயும் வெளியேயும், அரசியல் கட்சி அலுவலகங்கள் உள்ளிட்ட பிற இடங்களுக்கும் பரவக்கூடும் என்ற அச்சம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைமுறையை பாதிக்கக்கூடிய வகையில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுவதாகவும் தெரிவித்துள்ள ஆர்.எஸ்.பாரதி, சட்டம், ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதை தடுக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

இதனைத் தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஆர்.எஸ்.பாரதி, தேர்தல் ஆணையம் பாஜகவின் B டீம் ஆக செயல்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மயிலம் சட்டமன்ற தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் ,செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### 2026 – 27 ஆம் ஆண்டு கல்லூரியில் முதலாம் ஆண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில்

# TSC - HELP DESK - மாவட்ட வாரியாக தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவிப்பு!

2026 - 27 ஆம் ஆண்டு கல்லூரியில் முதலாமாண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டியாக TSC - HELP DESK சேவையை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் மாவட்ட வாரியாக கல்லூரிகளில் பயின்று வரும் தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகளை இதன் வழியாக தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

**மாவட்டம் : காஞ்சிபுரம்**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1. | நிரஞ்சன் | வேல்ஸ் பல்கலைக்கழகம் – சட்ட கல்லூரி , பல்லாவரம் | 8939620074 |
| 2. | ஏ.வ . தமிழன்பன் | வேல்ஸ் பல்கலைக்கழகம் – சட்ட கல்லூரி , பல்லாவரம் | 7708281503 |
| 3. | சித்தீக் | வேல்ஸ் பல்கலைக்கழகம் – கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 9342088110 |
| 4. | கிஷோர் | வேல்ஸ் பல்கலைக்கழகம் – கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 8428777448 |
| 5. | பிரவீன் குமார் டி | பாரத் பல்கலைக்கழகம்– சட்ட கல்லூரி , சேலையூர் | 9080158928 |
| 6. | டி ராஜேஷ் கண்ணா | பாரத் பல்கலைக்கழகம்– சட்ட கல்லூரி , சேலையூர் | 7305809071 |
| 7. | சந்தனராஜ் | பாரத் பல்கலைக்கழகம்– சட்ட கல்லூரி , சேலையூர் | 7200380902 |
| 8. | இம்தியாஸ் அலி | சென்னை கிருத்துவ கல்லூரி – தாம்பரம் | 7845503722 |
| 9. | ஜான்சன் | சென்னை கிருத்துவ கல்லூரி – தாம்பரம் | 8870829094 |
| 10. | கே மனோஜ் | பாரத் கலை மற்றும் அறிவியில் கல்லூரி , சேலையூர் | 9840425717 |
| 11. | எம் முஸ்ஹப் | பி.ஸ்.ஆர் அப்துர் ரஹ்மான் பொறியியல் கல்லூரி , வண்டலூர் | 7305026505 |
| 12. | நரேஷ் | பி.ஸ்.ஆர் அப்துர் ரஹ்மான் பொறியியல் கல்லூரி , வண்டலூர் | 9094465051 |
| 13. | ஜி ஸ்ரீநிதி | தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – குரோம்பேட்டு | 8637470335 |
| 14. | டி மணிகண்டன் | குன்றத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – குன்றத்தூர் | 9342523908 |
| 15. | பி ராஜேஷ் | குன்றத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – குன்றத்தூர் | 7092949912 |
| 16. | பி கிரிதர் | S.R.M.கலை மற்றும் அறிவியல் கல்லூரி –பொத்தேரி | 9345656897 |
| 17. | டி தனுஷ் | S.R.M.கலை மற்றும் அறிவியல் கல்லூரி –பொத்தேரி | 8825791696 |
| 18. | அர்ஜூன் | A.M.ஜெயின் கலை மற்றும் அறிவியல் கல்லூரி , மீனம்பாக்கம் | 9360356371 |
| 19. | அரவிந்த் | A.M.ஜெயின் கலை மற்றும் அறிவியல் கல்லூரி , மீனம்பாக்கம் | 7708346680 |
| 20. | கௌதம் பாலாஜி | S.R.M.பல்கலைக்கழகம்– சட்ட கல்லூரி –பொத்தேரி | 9786693799 |
| 21. | சஞ்சய்ராம் | S.R.M.பல்கலைக்கழகம்– சட்ட கல்லூரி –பொத்தேரி | 9500884598 |
| 22. | புருஷோத்தமன் | செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – கோவூர் | 9345284803 |
| 23. | நரேஷ் | செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – கோவூர் | 9790902849 |
| 24. | தமிழரசி | மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி – தரப்பாக்கம் | 7845422208 |
| 25. | ஷியாம் | மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி – தரப்பாக்கம் | 9342288284 |
| 26. | சாய் விக்னேஸ்வர் | VIT பல்கலைக்கழகம் – சட்ட கல்லூரி – மேல்கோட்டையூர் | 6369731377 |
| 27. | அபிநந்த | VIT பல்கலைக்கழகம் – சட்ட கல்லூரி – மேல்கோட்டையூர் | 9150727676 |
| 28. | லோகேஸ்வரன் | ஹிந்துஸ்தான் பல்கலைக்கழகம் – கலை மற்றும் அறிவியல் கல்லூரி – படூர் | 9500076618 |
| 29. | விஷால் ஈஸ்வர் | ஹிந்துஸ்தான் பல்கலைக்கழகம் – கலை மற்றும் அறிவியல் கல்லூரி – படூர் | 7845675059 |

**மொத்த மாணவர்கள்: 29**

**மாவட்டம் : நாமக்கல்**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1. | மோனிஷ் வரன் | மகேந்திரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காளிப்பட்டி | 86678 99230 |
| 2. | திவாகர் | கேஎஸ் ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு | 88259 97838 |
| 3. | கனிஅர்க்கன் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம் | 90251 31243 |
| 4. | ஹரி பிரசாத் | விநாயகா மிஷன், சேலம் | 97535 33939 |
| 5. | சஞ்சய் | விநாயகா மிஷன், சேலம் | 84317 80767 |
| 6. | நிதீஷ் | எஸ் எஸ் எம் கல்லூரி | 93459 81074 |
| 7. | சல்மான் | எஸ் எஸ் எம் கல்லூரி | 95660 80616 |
| 8. | சமர்ஜித் | எக்சல் கல்லூரி | 63805 55704 |

**மொத்த மாணவர்கள்: 8**

**மாவட்டம் : கடலூர்**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1. | எஸ். சிபிராஜ் | "MGR கலைக் கல்லூரி, கீழவன்னியூர், குமராட்சி, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா" | 78719 83430 |
| 2. | வி. தேவா | "MGR கலைக் கல்லூரி, கீழவன்னியூர், குமராட்சி, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா" | 86107 19346 |
| 3. | பி.சிவராமன் | "அரசு கலைக் கல்லூரி சி.முட்லூர், சிதம்பரம்." | 86105 41767 |
| 4. | ஜெ.அபிநயா | "அரசு கலைக் கல்லூரி சி.முட்லூர், சிதம்பரம்." | 95853 29122 |
| 5. | சு.பாலாஜி | "C.K. பொறியியல் கல்லூரி, கடலூர்" | 78128 24508 |
| 6. | கு.மஞ்சுளா | "C.K. பொறியியல் கல்லூரி, கடலூர்" | 82489 27515 |
| 7. | பி. வி. பரத் | "அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம்." | 96006 25903 |
| 8. | கு.வீரமணி | "அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம்." | 81221 97805 |

**மொத்த மாணவர்கள்: 8**

**மாவட்டம் : கும்பகோணம்**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1. | சிவராஜ் சந்தர் | அரசினர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 81241 04093 |
| 2. | ஜெயசீலன் | அரசினர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 76048 13983 |
| 3. | அருண் பிரசாத் | அரசினர் கலைக் கல்லூரி, திருவிடைமருதூர் | 89409 26617 |
| 4. | ராகுல் | அன்னை கல்லூரி | 88383 29855 |
| 5. | அருண் | அன்னை கல்லூரி | 63805 13317 |
| 6. | சங்கீதா | அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் | 81485 68107 |
| 7. | நிவேதா | அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் | 93422 50418 |

**மொத்த மாணவர்கள்: 7**

**ஈரோடு வீரமணி**, செயலாளர், தி.மு.க மாணவர் அணி

### தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026ஐ முன்னிட்டு

# சென்னையில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் பார்வையாளர்கள் நியமனம்!

*சென்னை, மே 4-*

*தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2026க்கான வாக்கு எண்ணிக்கை நாளை மே 4 2026 அன்று நடைபெறவுள்ளது. சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்கு எண்ணும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் ஆணையத்தின் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுவதை உறுதி செய்திடவும் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் பார்வையாளர் (Counting Observers) நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் விவரம்,*

*11 - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் - தேம்ஜென் வாபாங் ஆவோ*

*12 - பெரம்பூர் - திருமதி ரேஷ்மா ராஜேஷ்,*

*13 - கொளத்தூர் - விக்ரம் குமார்*

*14 - வில்லிவாக்கம் - ராஜேஷ் குமார் ஷர்வன்*

*15 - திரு.வி.க. நகர் (தனி) - ஜி.எஸ். சஹோடா,*

*16 - எழும்பூர் (தனி) - ராஜேஷ் குமார்,*

*17 - இராயபுரம் - எஸ். எல். நவீன்,*

*18 - துறைமுகம் - தீபபிரசாத் தஷ்*

*19 - சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி - முஷ்தக் அகமது,*

*20 - ஆயிரம் விளக்கு - சுதிர் பாரா,*

*21 - அண்ணா நகர் - ரஞ்சித் குமார் சிங்,*

*22 - விருகம்பாக்கம் - திருமதி ரிச்சா,*

*23 - சைதாப்பேட்டை - கரந்தி ஷேகர் சிங்,*

*24 - தியாகராயநகர் - திருமதி நான்சி சஹாய்,*

*25 - மயிலாப்பூர் - சித்தாத் யாதவ்.*

# சென்னையில் - 3 மையங்களில் வாக்கு எண்ணிக்கை!

சென்னை, மே 4 –

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 கடந்த 23.04.2026 அன்று தமிழகம் முழுவதும் நடைபெற்றது. இதில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆயுதங்கள் ஏந்திய காவல் குழுவினர் மூலம் பாதுகாப்பாக எடுத்து செல்லப்பட்டு ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் உத்தரவின்பேரில், கூடுதல் ஆணையாளர்கள் மேற்பார்வையில், இணை ஆணையாளர்கள் கண்காணிப்பில், துணை ஆணையாளர்கள் தலைமையில் மேற்படி 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு பலத்த காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பலத்த பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக், உத்தரவின் பேரில், வாக்கு எண்ணும் 04.05.2026 நாளன்று சென்னை பெருநகர் முழுவதும் கூடுதல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், காவல் ஆய்வாளர்கள், சிறப்பு காவல் படை, ஆயுதப்படை, மத்திய ஆயுதப்படை பிரிவைச்சேர்ந்த காவல் ஆளிநர்கள் உட்பட சுமார் 22,000 போலீசார் 3 வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் சென்னை பெருநகர் காவல் எல்லை முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:

1) வாக்கு எண்ணும் மையங்களுக்குள் அங்கீகரிக்கப்படாத நபர்கள் நுழைவதைத் தடுப்பதற்காக, அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் மும்முனைப் பாதுகாப்பு வளைய அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. பாதசாரிகள் மண்டலத்தின் தொடக்கத்தில் வெளிப்புற வளையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு, வாக்கு எண்ணும் மையங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட நபர்களின் அடையாளம் மற்றும் அங்கீகாரத்தைச் சரிபார்க்க போதுமான காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2) இந்தியத் தேர்தல் ஆணையம், மாவட்டத் தேர்தல் அதிகாரி அல்லது தேர்தல் அதிகாரியால் முறையாக வழங்கப்பட்ட, செல்லுபடியாகும் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை (Photo Identity Card) இல்லாமல் யாரும் வாக்கு எண்ணும் மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். நுழைவை ஒழுங்குபடுத்துவதற்கும், கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்தின் நுழைவாயிலிலும் உயர் அதிகாரிகள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

3) ஊடகத்தினர் கேமராக்கள் அல்லது வீடியோ கேமராக்களை வாக்கு எண்ணும் மையத்திற்குள் கொண்டு செல்லக்கூடாது. இருப்பினும், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அங்கீகார அட்டைகளைக் (Valid Authorization Passes) கொண்ட ஊடகத்தினர் கையடக்க புகைப்பட கேமராக்கள் மற்றும் வீடியோ கேமராக்களுடன் வாக்கு எண்ணும் மையங்களில் குறிப்பிட்ட எல்லை வரை அனுமதிக்கப்படுவர்.

4) தேர்தல் பார்வையாளரைத் தவிர வேறு யாரும் வாக்கு எண்ணும் கூடத்திற்குள் கைப்பேசியைக் (Mobile Phones) கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5) கூர்மையான பொருட்கள், தீக்குச்சிகள், கம்பிகள், லைட்டர்கள், வெடிபொருட்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள், தடை செய்யப்பட்ட பொருட்களான மண்ணெண்ணெய், கைபேசிகள், கேமராக்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்கள் போன்றவற்றை வாக்கு எண்ணும் மையத்திற்குள் யாரும் கொண்டு வர அனுமதியில்லை.


6) தனிநபர்கள், உள் மற்றும் வெளிப் பாதுகாப்பு வளையத்திற்கு இடைப்பட்ட பகுதியில் குடிநீர் அருந்த வாக்கு எண்ணும் மையத்திலிருந்து வெளியே வர அனுமதிக்கப்படுவார்கள். இருப்பினும், அவர்கள் மீண்டும் உள்ளே நுழையும்போது நுழைவாயிலில் முழுமையாகச் சோதனையிடப்படுவார்கள். பலமுறை நுழைவதற்கான அனுமதிச் சீட்டு இல்லாமல் வெளிப் பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி வெளியே செல்லும் எவரும் மீண்டும் உள்ளே நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். முகவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியவுடன், அவர்கள் மீண்டும் உள்ளே நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7) குடிபோதையில் இருக்கும் நபர்கள் (Drunken Persons) யாரும் வாக்கு எண்ணும் மைய வளாகத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை சோ. பால்ராஜ்

### மே 4 (2015)



**இளம் வயதிலேயே கழகத்தின்மீது பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஐ.சி.எப்–ல் பணியாற்றிய போது தொ.மு.ச. பேரவை ஆரம்பித்த போதே அதில் பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் –பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் "பால் உள்ள கொண்ட பால்ராஜ்", "பாட்டாளிகளின் தோழன் பால்ராஜ்" என்று பாராட்டப்பட்ட இவர், 1989–ல் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றதோடு, இரயில்வே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே இலங்கைத் தமிழர்களுக்காக ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**